**வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் பகுதி - 01 - 2018**

---

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் பகுதி 01 இன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் II, பீ.3 ஆம் பிரிவின் 2 ஆம் அட்டவணையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகக் கருதப்படும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கை பகுதி – 01 இன் பிரகாரம், முன்னைய ஆரம்பக் கைத்தொழில் அமைச்சாகவிருந்த தற்போதைய சமூக நலன்புரி மற்றும் ஆரம்ப கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. வடக்கு, கிழக்கு, வடமத்திய, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித் திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை அதிகரித்தல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள், குறிப்பாக முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு, உற்பத்தியாளர் நிறுவனங்கள் மற்றும் விவசாய வணிகங்களிற்கான மூலதன மானியங்களை இணைத்தல் மற்றும் பகுதியளவு கடன் உத்தரவாதங்கள் எனும் 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றன. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 15,612.27 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 106.97 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 9,121.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.50 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதித் தொகையான ரூபா 6,436.4 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 44.1 மில்லியன் நலன்பெறுனர்களாலும் ரூபா 54 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 0.37 மில்லியன தொகை இலங்கை அரசாங்கத்தாலும் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்டோபர் 15 ஆம் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2021 ஒக்டோபர் 15 ஆம் திகதி பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை

வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது செயற்திட்டம் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு செயற்திட்டம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல்,

வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நடவடிக்கைகளை அமுலாக்குவதற்காக நலன்பெறுனர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு வேறாக இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதி வளங்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. | வணிக வங்கிகளால் நலன்பெறுனர்களுக்கு கடன் விடுவிக்கப்பட்டதை அடுத்து இத் தொகை பதிவு செய்யப்படும். | நலன்பெறுனர்களால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல் இலாபத் தொகையான ரூபா 231.77 மில்லியன் தொகை செயற்திட்டச் செயற்பாட்டுச் செலவினத்திற்குப் பதிவளிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் செயற்பாட்டுச் செலவினங்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முறையாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | அன்னிய செலாவணிக் கொடுக்கல்வாங்கல் இலாபத் தொகை வேறாக நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்யப்பட வேண்டும். |

2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| எம்ஓஎப்பீ/ஈஆர்டீ/2007/002 ஆம் இலக்க 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய சுற்றறிக்கை | 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 31 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஏப்ரல் 25 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | நிதியளிப்பு முகவராலும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறும் முக்கிய தேவைப்பாடு இணங்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணியில் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக தாமதம் ஏற்பட்டதுடன் தவறு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைத் தேவைப்பாட்டிற்கு இணங்குதல் வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக முன்னேற்றம்

முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு, விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கான மூலதன மானியங்களை இணைத்தலுடன் பங்கேற்பு நிதி நிறுவனங்களின் நிதி இடரிற்கு உதவுதல் போன்ற 03 கூறுகளை செயற்திட்ட நடவடிக்கைகள் கொண்டிருந்தன. செயற்திட்ட நடவடிக்கைகளை அமுற்படுத்துவதன் செயன்முன்னேற்றம் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கூறு | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயற்பாடு | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கான இணைப்பு மானியங்களை வழங்குல் | யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களிலுள்ள ஏறத்தாழ 350 விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கு ஆதரவளிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ரூபா 579.57 மில்லியன் கூட்டுமொத்தத் தொகையான இணைப்பு மானியங்கள் மேற்குறித்த மாவட்டங்களில் உள்ள 61 விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. 2018 | ஒக்கீடு செய்யப்பட்ட நிதியின் குறைவான பயன்பாடு | 2019 இல் இப் பிரச்சனை குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் | இணை மானியங்களை வழங்குவதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள 07 விவசாயி உற்பத்தியாளர் நிறுவனங்களிற்கு ரூபா 52.37 மில்லியன் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. | | | |
| முதலீட்டு தயார்படுத்தல் ஆதரவு | ஊவா, மத்திய மற்றும் வட மேல் மாகாணங்களில் உள்ள 02 தொழில்நுட்ப சேவை வழங்குர்களுக்கே ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவர்களில் ஒரு சேவை வழங்குனர் மாத்திரமே 15 பரிவுரைகளைப் பூர்த்தி செய்து ரூபா 1.61 மில்லியன் தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விடுவிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படுவதில் தாமதங்கள் ஏற்படக்கூடும். | முதலீட்டு தயார்படுத்தல்களுக்கான ஒப்பந்தங்கள் 02 தொழில்நுட்ப சேவை வழங்குர்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை தேவைப்பாட்டிற்கு போதுமானதல்ல. | வழங்கப்பட முன்னர் ஒப்பந்தக்காரர்களின் இயலுமை குறித்து மதிப்பிப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| பகுதியளவு கடன் உத்தரவாதங்கள் | செயற்திட்டத்தின் பகுதியளவு கடன் உத்தரவாதங்களின் கீழ் ஐ.அ.டொலர் 7.12 மில்லியன் தொகையான ஒதுக்கீடு 2018 திசெம்பர் 31 வரைபயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் நலன்பெறுனர்களால் பெறப்பட முடியாது போகும். | நிர்வாக ஒழுங்கமைப்பில் உள்ள சிக்கல்கள் காரணமாக பதிவு செய்யப்பட்ட குறித்த வர்த்தக வங்கிகளால் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தனியார் துறையில் உள்ள பதிவு செய்யப்பட்ட வணிக வங்கிகளினூடாக கடன் திட்டங்களை அமுலாக்குவதற்கு உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற மூலவளங்கள்**

| | கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதியீட்டல் முகவர்களால் செலவு வைக்கப்பட்ட ஐ.அ. டொலர் 13.93 மில்லியன் தொகையான வருமானத்தில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக ஐ.அ. டொலர் 8.06 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. மிகுதித் தொகையான ஐ.அ. டொலர் 8.06 மில்லியன் தொகை 06 மாதங்களிற்கு மேலாக இலங்கை மத்திய வங்கியின் விசேட டொலர் கணக்கில் செலவிடப்படாதிருந்ததுடன் | நலிவான நிதிமுகாமைத்துவம் காரணமாக நிதியில் குறைபயன்பாடு நிலவியது. | குறித்த காலப்பகுதியின் போது ஐ.அ. டொலர் 13.93 மில்லியன் தொகை செலவிடப்படுவதற்கு மதிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், நலனாளிகளில் பெரும்பாலானோர் தகைமைகளையும் | திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஏனைய மீதித் தொகையான ரூபா 212.79 மில்லியன் செயற்திட்ட நடைமுறைக் கணக்கில் காணப்பட்டது. | | மானிய அளவீடுகளைப் பூர்த்திசெய்வதற்கும் தவறியிருந்தனர். | |
| (ஆ) | ரூபா 4.25 மில்லியன் கிரயத்தில் முன்னைய ஆண்டின் போது செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஜீஜஎஸ் மென்பொருள் ஒரு வருடத்திற்கும் மேலாக குறித்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முன்- திட்டமிடல் இன்றி சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | ஜீஜஎஸ் உசாவுனரின் ஆட்சேர்ப்பு நடைமுறை அமுலாக்கப்பட்டு வருகின்றது. | விரிவான முறையில் தரவு அடிப்படை செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.3 மனித மூலவள முகாமைத்துவம் தொடர்பான பிரச்சனைகள்

| பதவியணி நிலை | பதவிகளின் எண்ணிக்கை | | | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|
| | **அங்கீகரிக்கப்பட்டது** | **2018 திசெம்பர் 31 இல் உள்ளபடியானது** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** | | | |
| செயற்திட்டப் பணிப்பாளர் | 01 | - | 01 | செயற்திட்ட நடவடிக்கைகளின் அமுலாக்கம் மற்றும் செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு நிர்வாகம் செயலிழந்திருந்தது. | தகுதியான உத்தியோகத்தரை நியமிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முக்கியமான முகாமைத்துவ நிலையில் உள்ள நபர்களை ஆட்சேர்ப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| உள்ளகக் கணக்காய்வாளர் | 01 | - | 01 | நிதி மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள் மீதான கண்காணிப்பு, பொறிமுறை எளிதாக்கப்படும். | | |

**3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

| கணக்காய்வுப் பிரச்சனைகள் | தாக்கம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் எய்தப்படுவதற்காக செயற்திட்டத்தின் ஒரு ஒட்டுமொத்த கூட்டமைப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. | செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் எய்தப்படுவதற்கு பௌதீக மற்றும் நிதிக்கான நேர இலக்குகள் அளவிடப்பட்டிருக்கவில்லை | 687 செயற்திட்டங்களில் 81 நியமிக்கப்பட்ட குழுக்களால் அங்கீகரிக்கப்பட்டதுடன் மிகுதி செயற்பாட்டு நடைமுறையில் 2018 செப்தெம்பர் வரை நிலவியது. | விரிவான செயல் திட்டத்தின் தேவைப்பாடு வலியுறுத்தப்பட்டுள்ளது. |